# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,878/6—1969 නොවැම්බර් 7 වැනි සිකුරාදා—1969.11.7

14,878/6 ம் இலக்கம்—1969 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 7 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*1969 இள கிவ் 5 A*

*ம. தே. அ. எண். சீ. 270/65 (4)*

*1946 ஆம், 1947 ஆம் ஆண்டு இலங்கை (அரசமைப்பு, சுதந்திரம்) அரசப்பேரவைக் கட்டளைகளின் 49 ஆம் பிரிவின்படி, தொழில், தெரிழல் வசதி கௌரவ அமைச்சரின் பாராளுமன்றக் காரியதரிசியும் பாராளுமன்ற உறுப்பினருமான திருவாளர் ஸ்ரீவன் த சில்வா ஜயசிங்க அவர்களை விஞ்ஞான ஆராய்ச்சி, வீடமைப்பு அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய கௌரவ மஹ பாலகேடொன் ஹென்றி ஜயவர்தன அவர்கள் இத்தீவினை வந்தடையும்வரை, 1969 நவம்பர் 7 ஆம் திகதியிலிருந்து, தமது கடமைகளுடன் விஞ்ஞான ஆராய்ச்சி, வீடமைப்பு அமைச்சராகவும் கடமையாற்றும்படி மகாதேசாதிபதி அவர்கள் மகிழ்ச்சியுடன் நியமித்தமை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*அதி உத்தமஞரின் கட்டளைப்படி,*
*ஏ. பி. எல்கடுவே,*
*மகாதேசாதிபதியின் செயலாளர்.*

*மகாதேசாதிபதியின் அலுவலகம்,*
*கொழும்பு, 1969 நவம்பர் 7*

---

*1969 இள கிவ் 6 A*

*ம. தே. அ. எண். சீ. 162/49 (7)*

*1946 ஆம், 1947 ஆம் ஆண்டு இலங்கை (அரசமைப்பு, சுதந்திரம்) அரசப்பேரவைக் கட்டளைகளின் 51 ஆம் பிரிவின்படி, போக்குவரத்து அமைச்சின் சிரேட்ட உதவிச் செயலாளர், இலங்கை நிருவாக சேவையினரான திருவாளர் என். பீ. விஜேரத்ன அவர்களை, போக்குவரத்து அமைச்சின் நிரந்தரச் செயலாளராகிய திருவாளர் ஏ. எல். பெரோா அவர்கள் இத்தீவினை வந்தடையும்வரை, 1969 நவெம்பர் 11 ஆம் திகதியிலிருந்து தமது கடமைகளுடன் போக்குந்வரத்து அமைச்சின் பதில் நிரந்தரச் செயலாளராகவும் கடமையாற்றும்படி மகா தேசாதிபதி அவர்கள் மகிழ்ச்சியுடன் நியமித்தமை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*அதி உத்தமஞரின் கட்டளைப்படி,*
*ஏ. பீ. எல்கடுவே,*
*மகாதேசாதிபதியின் செயலாளர்.*

*மகாதேசாதிபதியின் அலுவலகம்,*
*கொழும்பு, 1969 நவம்பர் 6*

---

*1969 இள கிவ் 7 A*

*ம. தே. அ. எண். சீ. 162/49 (7)*

*1946 ஆம், 1947 ஆம் ஆண்டு இலங்கை (அரசமைப்பு, சுதந்திரம்) அரசப்பேரவைக் கட்டளையின் 51 ஆம் பிரிவின்படி, அஞ்சல் அதிபர் நாயகமும் தந்திப் போக்குவரத்து அதிபரும் ஆகிய இலங்கை நிருவாக சேவை யினரான திருவாளர் வீ. எம். அபேசேகரா அவர்களை, அரசாங்கக் கட்டுவேலை, தபால், தந்திப் போக்குவரத்து அமைச்சரின் நிரந்தரச் செயலாளராகிய திருவாளர் ஏ. ஓ. வீரசிங்க, எம். பீ. ஈ., அவர்கள் இத்தீவினை வந்தடையும்வரை, 1969 நவெம்பர் 11 ஆம் திகதியிலிருந்து தமது கடமைகளுடன் அரசாங்கக் கட்டுவேலை, தபால், தந்திப் போக்குவரத்து அமைச்சின் பதில் நிரந்தரச் செயலாளராகவும் கடமையாற்றும்படி மகாதே சாதிபதி அவர்கள் மகிழ்ச்சியுடன் நியமித்தமை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*அதி உத்தமஞரின் கட்டளைப்படி,*
*ஏ. பீ. எல்கடுவே,*
*மகாதேசாதிபதியின் செயலாளர்.*

*மகாதேசாதிபதியின் அலுவலகம்,*
*கொழும்பு, 1969 நவம்பர் 6*